

திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள "பசும்பொன் முத்துராமலிங்க தேவர்" அவர்களின் திருவுருவச் சிலைக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் மற்றும் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள், மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



தலைவாசல் தொகுதி செ.குணசேகரன் அவர்களின் இல்லத் திருமண விழாவிற்கு உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் 26.10.2025 அன்று நேரில் வீட்டிற்கு வந்து மணமக்கள் சூர்யா – ஓம்பிரகாஷ் அவர்களை வாழ்த்தினார். உடன் முன்னாள் ஒன்றிய பொறுப்பாளர் ஜெயபாலன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் பாஸ்கரன், சின்னப்பையன், சங்கரைய்யா, தேவேந்திரன், தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட தலைவர் திருமுருகவேள், மாயக்கிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நெல் ஈரப்பதத்தை 17 சதவிகிதத்திலிருந்து

# 22 சதவிகிதம் உயர்த்தி கொள்முதல் செய்திட அனுமதிப்பீர்!

### ஒன்றிய உணவுத்துறை அமைச்சரிடம் – அமைச்சர் அர.சக்கரபாணி வலியுறுத்தல்!

சென்னை, நவ.1-

**உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி நேற்று முன்தினம் (30.10.2025) சென்னை வர்த்தக மையத்தில் ஒன்றிய நுகர்வோர் பாதுகாப்பு, உணவு மற்றும் பொது விநியோகத்திட்டம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி அவர்களைச் சந்தித்து நெல் ஈரப்பதத்தை 17% இலிருந்து 22% ஆக உயர்த்திக் கொள்முதல் செய்திட அனுமதியும் செறிவூட்டப்பட்ட அரிசியைச் சோதனை செய்து, தரச்சான்றினை (Fit for Blending Certificate) விரைந்து வழங்கிடவும் ஆவன செய்திட வேண்டுகோள் விடுத்தார்.**



சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற 'விண்டெர்ஜி இந்தியா 2025' கருத்தரங்கத்திற்காக வருகை தந்திருந்த ஒன்றிய நுகர்வோர் பாதுகாப்பு, உணவு மற்றும் பொது விநியோகத்திட்டம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி அவர்களை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி சந்தித்து ஈரப்பதத்தை 17% இலிருந்து 22%ஆக அதிகரித்து நெல் கொள்முதல் செய்திடவும் செறிவூட்டப்பட்ட அரிசியைக் கலப்பதற்கான தரச்சான்றினை விரைந்து வழங்கிட ஆவன செய்திடக் கேட்டுக் கொண்டதோடு கீழ்க்காணும் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தர வேண்டுகோள் விடுத்தார்கள்.

2016 முதல் 2021 வரை தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய உணவு மானிய நிலுவைத் தொகை ரூபாய் 973 கோடி ரூபாயை வழங்கல்!

2010-11, 2013-14 & 2014-15 ஆண்டுகளுக்கான அரிசிக்காக இறுதி செய்யப்பட்ட விலை (Final Economic Cost) முன்மொழிவினை ஏற்று அதற்கான தொகை வழங்குதல்!

நெல்லைக் காய வைக்கும் இயந்திரங்களை நெல் கொள்முதல் நிலையங்களுக்கு வழங்கிட உதவி செய்தல்!

மேலும், அக்டோபர் – டிசம்பர் 2025 மாதங்களுக்கான மானியத் தொகையில் ரூபாய் 1745.66 கோடி வழங்கிட அனுமதி அளித்ததற்காக ஒன்றிய அமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது தமிழ்நாடு அரசின் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் சத்ய பிரதா சாகு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குனர் முனைவர் ஆ.அண்ணாதுரை, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் சு.சிவராசு, மற்றும் ஒன்றிய அரசின் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## தமிழ்நாட்டின் 35ஆவது கிராண்ட் மாஸ்டர்

# இளம்பரிதி செஸ் விளையாட்டில் நமது ஆளுமையை மேலும் ஒளிவிடச் செய்துள்ளார்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, நவ.1–

தமிழ்நாட்டின் 35ஆவது கிராண்ட் மாஸ்டர் இளம்பரிதி அவர்களை வாழ்த்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் பதிவு வெளியிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:–

**தமிழ்நாட்டில் இருந்து கிராண்ட் மாஸ்டர் தகுதியைப் பெற்றிருக்கும்**

**35ஆவது வீரரான இளம்பரிதி அவர்கள் செஸ் விளையாட்டில் நமது**



**ஆளுகையை மேலும் ஒளிவீசிடச் செய்துள்ளார்.**

**மதிநுட்பத்தால் போராடி வரலாறு படைத்து, கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்று, தமிழ்நாட்டின் வாகையர் மகுடத்தில் மற்றுமொரு வைரமாக இளம்பரிதி சேர்ந்துள்ளார்.**

**தமிழ்நாட்டின் செஸ் களத்தின் மீது எழுஞாயிறு உதயமாகி வரும் நிலையில், நம்பிக்கையளிக்கும் அனைத்தையும் வெற்றிகளாக திராவிட மாடல் மாற்றிக் காட்டும். மேலும் பல கிராண்ட்மாஸ்டர்கள் உருவாகி வருவார்கள்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கான முன்சோதனை!

சென்னை, நவ.1–

2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெறுவது குறித்து, இந்திய அரசின் அறிவிப்பானது 16.06.2025 தேதியிட்ட மத்திய அரசின் அரசிதழில் (அறிவிப்பு எண். S.O. 2681) வெளியிடப்பட்டு, அது 16.07.2025 தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழில் மீண்டும் வெளியிடப்பட்டது.

மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டம் 1948 பிரிவு 17எ ன் படி, 16.10.2025 தேதியிட்ட இந்திய அரசிதழ் அறிவிப்பு எண். S.O. 4698(E) இல் அறிவிக்கப்பட்டுள்ள படி, இந்திய தலைமைப் பதிவாளர் மற்றும் மக்கள் தொகை கனக்கடுப்பு ஆணையர் அலுவலகம், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி பகுதிகளில் 2027 ஆம் ஆண்டுக்கான இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான முன்சோதனையை நடத்த இருக்கிறது.

இந்த முன்சோதனை யானது, 2027 ஆண்டு நடைபெறவுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பிற்க்கு முன்பு நடத்தப்படும் ஒரு முக்கிய முன்னோட்டம் மற்றும் ஆயத்தப் பணியாகும். 2027 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பிற்க்கு முன்மொழியப்பட்ட கருத்துக்கள், நடைமுறைகள், கேள்வித்தாள்கள் மற்றும் டிஜிட்டல் செயலிகளை மதிப்பிடுவதற்காக இந்த முன்சோதனை நடைபெறவுள்ளது. 2027 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பானது இந்தியாவின் முதல் முழுமையான டிஜிட்டல் கணக்கெடுப்பாகும். இந்த முன்சோதனை யின் முடிவுகள், 2027 ஆண்டு நாடு முழுவதும் நடைபெறவுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது, எதிர்நோக்கவிருக்கும் செயல்பாட்டு சவால்களைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய உதவும்.

முதல் முறையாக, முன்சோதனையின் போது, மொபைல் செயலிகளைப் பயன்படுத்தி தரவுகள் சேகரிக்கப்படுவதுடன், டிஜிட்டல் லேஅவுட் வரைபடங்களும் வரையப்படும். மக்கள் தொகை கணக்கெடுப்பு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு (CMMS) வலைத் தளம் மூலம் இந்த முழு செயல்பாடுகளும் நிர்வகிக்கப்படும், இது நிகழ்நேர மேற்பார்வை மற்றும் முன்னேற்ற கண்காணிப்புக்காக உருவாக்கப்பட்ட வலைத் தளமாகும்.

2027 மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டமான வீட்டுப் பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பிற்கான முன்சோதனை 10.11.2025 முதல் 30.11.2025 வரை நடைபெறவுள்ளது, இதனுடன் 01.11.2025 முதல் 07.11.2025 வரை சுயகணக்கெடுப்பு (Selfenumeration) செய்வதற்கான முன் சோதனையும் நடைபெறவுள்ளது.

முன்சோதனைக்காக தமிழ்நாடு மாநில அரசுடன் கலந்தாலோசித்து மூன்று இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது:

கிராமப்புற பகுதி அஞ்செட்டி தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம்

கிராமப்புற பகுதி ஆர்.கே. பெட் தாலூக்காவின் ஒரு பகுதி, திருவள்ளூர் மாவட்டம்

நகர்ப்புற பகுதி மாங்காடு நகராட்சி, காஞ்சிபுரம் மாவட்டம்

தமிழ்நாடு மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குனரகம், முன்சோதனை சுமூகமாக நடைபெறுவதற்கு, தொழில்முறை வழிகாட்டுதல், பயிற்சி மற்றும் மேற்பார்வை உள்ளிட்டவற்றை தமிழ்நாடு அரசுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தும்.

மாநில அரசின் கல்வி, வருவாய், சுகாதாரம், மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் போன்ற பல்வேறு துறைகளிலுள்ள அலுவலர்கள் களப்பணிக்காக கணக்கெடுப்பாளர்களாகவும் மேற்பார்வையாளர்களாகவும் செயல்படுவார்கள். களப்பணிகளுக்கு முன் கணக்கெடுப்பாளர்களுக்கும் மேற்பார்வையாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும்

தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிப் பகுதிகளில் உள்ள பொதுமக்கள், முன்சோதனையின் போது மக்கள் தொகை கணக்கெடுப்பு களப்பணியாளர்களுக்கு முழு ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். களப்பணியாளர்களுடன் துல்லியமான விவரங்களைப் பகிர்ந்து கொண்டால் அது, கணக்கெடுப்பின் போது பயன்படுத்தப்படும் டிஜிட்டல் செயலிகள் மற்றும் செயல்முறைகளைச் செம்மைப்படுத்த உதவும், இந்த முன்சோதனையானது, 2027 ஆம் ஆண்டு வெற்றிகரமான மற்றும் நெறிப்படுத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெற வழி வகுக்கும். நாடு முழுவதும் நடைபெறவுள்ள 2027 ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு அதிக துல்லியம், செயல்திறன் மற்றும் தயார்நிலையை உறுதி செய்ய இந்தப் முன்சோதனை பயிற்சி உதவும்.

## தி.மு.க. வர்த்தகர் அணி

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க, வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி – மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. வர்த்தகர் அணி அணியின் திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருப்பூர் தெற்கு மாவட்டம்**

தலைவர் – பி. ரவிக்குமார் 51, சரஸ்வதியம்மாள் குடியிருப்பு, வசியாபுரம், ஜமீன் ஊத்துக்குளி அஞ்சல், பொள்ளாச்சி – 642004, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் – ப. சின்னத்துரை 78/1சி, சிக்கந்தர் பாட்ஷா வீதி, காந்தி நகர் அஞ்சல், உடுமலைப்பேட்டை – 642154, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் – சி. தங்கராஜ் 10/99, பணத்தம்பட்டி, மெட்ராத்தி அஞ்சல், மடத்துக்குளம் – 642203, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் – 1) ஆர். மனோகரன் 14/214, எஸ். வி. புரம், எஸ்.வி. மில்ஸ் அஞ்சல், உடுமலைப்பேட்டை – 642128, திருப்பூர் மாவட்டம். 2) வி. பொன்ராஜ் 87, சதாசிவம் வீதி, உடுமலைப்பேட்டை – 642132, திருப்பூர் மாவட்டம். 3) து. சுப்பிரமணியன் 7/33, சின்ன வாளவாடி, உடுமலைப்பேட்டை – 642132, திருப்பூர் மாவட்டம். 4) ஆர். தனசேகர் (எ) ஆர்.டி.எஸ். தனபால் 16, நெல்லுக்கடை வீதி, உடுமலைப்பேட்டை – 642126, திருப்பூர் மாவட்டம். 5) ஆர். சதாசிவம் 590, வல்லக்குண்டாபுரம், அம்மாபட்டி அஞ்சல், உடுமலைப்பேட்டை – 642205, திருப்பூர் மாவட்டம். 6) ஆ. புவனேஷ்குமார் சோமவாரபட்டி நடு வீதி, பெதப்பம்பட்டி அஞ்சல், உடுமலைப்பேட்டை – 642205, திருப்பூர் மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
**சென்னை – 18**
**நாள்– 30–10–2025.**

**காசி முத்துமாணிக்கம்**
**செயலாளர்,**
**தி.மு.க. வர்த்தகர் அணி**

## தமிழ் வளர்ச்சித் துறையில் 13 உதவி இயக்குநர்கள் –

# அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியில் பயிற்சி பெற்றமைக்கான தகுதிச் சான்றுகள்!

### அமைச்சர் மு.பெ. சாமிநாதன் வழங்கினார்!

சென்னை, நவ.1-

தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் தமிழ் ஆட்சிமொழித் திட்டத்தை முழுமையாகவும் செம்மையாகவும் செயற்படுத்திடும் வகையில் 1958-ஆம் ஆண்டு ஆட்சிமொழிக் குழு உருவாக்கப்பட்டு. ஓர் ஆய்வுத் தனி அலுவலர் பணியிடம் உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் 1972-இல் இப்பணியிடத்துடன் சேர்த்து ஒன்பது ஆய்வுத் தனிஅலுவலர் பணியிடங்கள் உருவாக்கப் பட்டன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ் வளர்ச்சித் துறையின் அலுவலக கட்டமைப்பு சீரமைக்கப்பட்டு தமிழாய்வு அலுவலர் என்ற பதவிப் பெயரினை மாற்றி ஒருமுகமாக 8 உதவி இயக்குநர் பணியிடங்கள் என 1998ஆம் ஆண்டில் மாற்றியமைக்கப்பட்டது.

இந்நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க, தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக நிறைவு செய்திட அரசாணை வெளியிடப்பட்டது.

இளங்கலை மற்றும் முதுகலை தமிழிலக்கியம் பயின்ற மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக தேர்வு மற்றும் நேர்காணல் நடத்தப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட 13 நபர்களுக்கு உதவி இயக்குநர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 22.09.2025 தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

தமிழ் இலக்கியக் கல்வி கற்றவர்கள் தமிழ் வளர்ச்சித் துறையின் உதவி இயக்குநர்களாகப் பணி வாய்ப்புப் பெற்றுள்ளது தமிழுக்கான நற்காலம் மட்டுமல்ல பொற்காலமுமாகும்.

புதியதாகத் தெரிவு செய்யப்பட்ட 13 உதவி இயக்குநர்களுக்கு திறன் மேம்பாட்டை உறுதி செய்வதற்காகவும் காலத்திற்கேற்ப தேவையான பயிற்சிகள் வழங்கப்படுவது மிகுந்த அவசியத்தைக் கருதியும் தற்போது நடைமுறையில் உள்ள அரசுப் பணிகளுக்கான பொதுவான நடைமுறைகள் / விதிகளை அறிந்து செயலாற்றும் வண்ணம், அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியால் வழங்கப்படும் அடிப்படை பயிற்சியின் வாயிலாக, தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், உரிமை விதிகள் 2005, தமிழ்நாடு நிதி விதித்தொகுப்பு விதிகள், அடிப்படை கணினி திறன்கள் உள்ளிட்ட இனங்களில் ரூபாய் 5 இலட்சத்து 85 ஆயிரம் செலவில் அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியில் 15 பணி நாள்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.

தமிழ் வளர்ச்சித் துறை வரலாற்றில் முதன்முறையாக உதவி இயக்குநர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி பெற்றமைக்கான தகுதிச் சான்றுகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்கள் நேற்று (30.10.2025 வியாழக்கிழமை) அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ரெ. பாலகிருஷ்ணன், (ப.நி.). தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ந.அருள், அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியின் உதவி இயக்குநர் ராகவேந்தர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் தனது சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 25 லட்சம் மதிப்பீட்டில் அரசு பள்ளி மாணவ மாணவியர்களுக்கு 350 பெஞ்ச் , 350 டெஸ்க்களை வழங்கினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ் , சாவித்திரி கடலரசு மூர்த்தி, அஸ்லாம் , வேல்மணி சித்ரா சந்திரசேகர் , மகேந்திரன், தம்பிதுரை மற்றும் அரசு பள்ளி தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் உடன் இருந்தனர்.



தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் மாநகராட்சி ராயாஸ் திருமண மண்டபத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் விலையில்லா வீட்டுமனை பட்டாவினை பயனாளிகளுக்கு தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம் வழங்கினார், உடன் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி. ஆர்.சுதா, கும்பகோணம் மாநகராட்சி மேயர் க.சரவணன், துணை மேயர் சுப.தமிழழகன் (கும்பகோணம்), வருவாய் கோட்டாட்சியர் ஹிருத்யா எஸ்.விஜயன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.